

திருச்சி தெற்கு மாவட்டத்தில், இனமான பேராசிரியர் பெருந்தகை அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்ட கழக செயலாளரும், பள்ளி கல்வித்துறை அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் அவர்களின் தலைமையில் இனமான பேராசிரியர் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதையை செலுத்தப்பட்டது . இந்தநிகழ்வில் மாநகர செயலாளர் மு. மதிவாணன், பகுதி கழக செயலாளர் மோகன், மற்றும் பகுதி கழகச் செயலாளர்கள் ஒன்றிய கழகச் செயலாளர்கள் கழக நிர்வாகிகள், கலந்து கொண்டனர்



நேற்று (07.03.2026) சென்னை, தேனாம்பேட்டை டி.எம்.எஸ். வளாகத்தில் உள்ள ஜீவா இல்லத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் புதுப்பிக்கப்பட்ட சென்னை ஜீவா இல்லம் மற்றும் மாமல்லபுரம் புதுப்பிக்கப்பட்ட ஜவஹர்லால் நேரு ஓய்வு இல்லம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இவ்விழாவில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு செயலாளர் கொ.வீர ராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் சி. அ.ராமன், தமிழ்நாடு தொழிலாளர் நலவாரிய செயலாளர் திருமதி ஆர். செந்தில்குமாரி, கூடுதல் தொழிலாளர் ஆணையர் சென்னை திருமதி யாஸ்மின் பேகம் அவர்கள், தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை செயலாளர் கி.நடராஜன் மற்றும் துறை அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### 115 மருத்துவ அலுவலர்கள் – 83 கண் மருத்துவ உதவியாளர்கள் – 75 ஆய்வக நுட்புநர்களுக்கு பணி ஆணைகள்!

# குடும்ப நலத்துறை செயல்பாடுகளில் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கு விருதுகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, மார்ச்.9-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, 115 மருத்துவ அலுவலர்கள், 83 கண் மருத்துவ உதவியாளர்கள், 75 ஆய்வக நுட்புநர்கள் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

குடும்பநலத்துறை செயல்பாடுகளில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது.

250 முதுநிலை மருத்துவர்களுக்கு முதலமைச்சர் அவர்களால் மிக விரைவில் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட உள்ளது.

தேசிய நலவாழ்வு குழு மத்தில் பணியாற்றும் ஒப்பந்த பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (07.03.2026) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள, தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், 115 மருத்துவ அலுவலர்கள், 83 கண் மருத்துவ உதவியாளர்கள், 75 ஆய்வக நுட்புநர்கள் ஆகியோருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி, 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான மாநில அளவிலான சிறந்த குடும்ப நல செயல்பாடுகளுக்கு சிறப்பாக பணியாற்றிய அலுவலர்களுக்கு விருதுகள் வழங்கி விழா பேருரையாற்றினார்கள்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தொடர்ச்சியாக புதிய பணிநியமன ஆணைகள் வழங்குவதாக இருந்தாலும், புதிய பதவி உயர்வுகள் அளிக்கும் நிகழ்வுகளாக இருந்தாலும், புதிய பணியிடங்களை தோற்றுவிக்கும் நிகழ்வுகளாக இருந்தாலும், கலந்தாய்வு மூலம் பணியிடமாறுதல்கள் என்றாலும் மிகுந்த வெளிப்படை தன்மையோடு தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் (MRB) சார்பில் தொடர்ச்சியாக இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இத்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை எல்லாம் ஒவ்வொன்றாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு இடையில் பல்வேறு வகையிலான வழக்கு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள போதும் அனைத்து வழக்குகளையும் சட்ட ரீதியாக எதிர்கொண்டு பணி ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் மருத்துவத்துறை வரலாற்றில் மருத்துவப் பணியிடங்கள் காலியாக இல்லாத சூழல் என்பது இந்த காலக்கட்டத்தில் மட்டுமே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த துறைக்கு கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னாள் இந்த நிர்வாகம் பொறுப்பேற்ற போது உண்மையில் மிக பெரிய அலவிளான அதிர்ச்சி பெரும் பகுதிகளான இடங்களில் மருத்துவப்பணியிடங்கள் காலி என்ற விவரம் ஏறத்தாழ 30, 40 சதவீதம் காலிப்பணியிடங்கள் மாவட்ட வாரியாக, தொகுதி வாரியாக அல்லது ஒட்டு மொத்த மருத்துவமனைகளிலும் தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொண்டு வந்த நிலையில் அறிந்தோம். குறிப்பாக 400க்கும் மேற்பட்ட மலைக்கிராமங்களில் ஆய்வு செய்தபோதும் ஆங்காங்கே இருந்த மருத்துவக் கட்டமைப்புகளில் காலிப்பணியிடங்கள் என்பது மிகப் பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தி வந்தது. தற்போது அனைத்து காலிப்பணியிடங்களும் நிரப்பப்பட்டு உள்ளது.

**பணிநியமன ஆணைகள்**

அந்தவகையில் இன்று வரை தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் (MRB) சார்பில் 10,625 பேரும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலமாக 2,429 பேரும், தேசிய நலவாழ்வு குழுமம் (NHM) சார்பில் 14,272 பேரும், புதிதாக உருவாக்கப்பட்ட 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்களுக்காக மாவட்ட சுகாதார நலவாழ்வு சங்கம் மூலம் 2,832 பேரும், 50 புதிய நகர்ப்புற, ஊரக ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 506 பேரும், பணிநிரந்தரம் செய்யப்பட்ட செவிலியர்கள் 8,834 பேருக்கும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கருணை அடிப்படையிலான பணிநியமனங்கள் என்கின்ற வகையில் 281 பேருக்கும், மருத்துவத்துறை வரலாற்றில் கடந்த 5 ஆண்டுகளில் புதிய பணிநியமனங்கள் என்கின்ற வகையில் பணிநிரந்தரம் செய்யப்பட்டவர்கள் என்கின்ற வகையில் 39,779 பேருக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் 17,780 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் பதவி உயர்வு மற்றும் பணியிடமாறுதல் கலந்தாய்வு மூலம் 59,985 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். அந்தவகையில் இன்று 115 பேருக்கு பணி சாரா பட்டதாரிகள் என 127 மருத்துவர்கள் பணிக்காலக்கெடு முடிந்த நிலையில் பணிபுரிந்து வந்தனர். இவர்களுக்கு நிரந்தர பணி வழங்குவதற்கு ஏதுவாக மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தகுதித் தேர்வுகள் நடத்தப்பட்டு 115 பேர் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். தேர்ச்சி பெற்ற 115 பேருக்கு இன்று பணி ஆணைகள் வழங்கப்பட்டது. மேலும் கண் மருத்துவ உதவியாளர்களுக்கு தேர்வு நடத்தப்பட்டு அதில் தேர்ச்சி பெற்ற 83 பேருக்கு இன்று பணி ஆணைகள் வழங்கப்பட்டது. இவர்களில் 75 பேர் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறைக்கும், 6 நபர்கள் மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள் இயக்குநரகத்திற்கும், 2 பேர் மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அண்மையில் கூட 1100 உதவி மருத்துவர்களுக்கான தேர்வு நடத்தப்பட்டது. இந்த தேர்வில் 25,000த்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். தற்போது உதவி மருத்துவர்களுக்கு பணிநியமனம் வழங்கப்படுவது என்பது இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கிறது. அதேபோல் முதுநிலை மருத்துவர்கள் பணியிடங்களைப் பொறுத்தவரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலைப் பெற்று, இன்றைக்கு முதுநிலை மருத்துவர்களுக்கும் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக தேர்வு நடத்தப்பட்டு அவர்களையும் இந்த துறையில் இணைப்பது என்கின்ற வகையில் 299 முதுநிலை மருத்துவர்கள் MRB மூலம் அறிவிப்பு வெளியிடப்பட்டு 250 பேர் தேர்வாகியிருக்கிறார்கள். இவர்களுக்கு வருகின்ற 11.03.2026 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் பணி நியமன ஆணைகளை வழங்க உள்ளார்கள்.

**ஊதிய உயர்வு அறிவிப்பு**

இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு தற்காலிமாக அல்லது ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிபவர்கள் ஊதிய உயர்வு தொடர்பாக தொடர்ந்து கோரிக்கைகளை வைத்து வந்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அந்தவகையில் இன்று ஒரு மகிழ்ச்சியான அறிவிப்பை வெளியிடுவதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். 2026-27 ஆம் ஆண்டிற்கான ஊதிய உயர்வு என்பது ஏற்கெனவே அவர்கள் பெற்று வருகின்ற ஊதியங்களின் அடிப்படையில் ரூ.169 கோடி கூடுதல் செலவினம் என்கின்ற வகையில் 41,000 ஒப்பந்த பணியாளர்கள் பயன்பெறுகின்ற வகையிலான அறிவிப்பை நாங்கள் வெளியிடுவதில் பெருமைக் கொள்கிறோம். இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு சித்தா மற்றும் ஆயுஷ் மருத்துவர்கள் பெற்று வந்த சம்பளம் ரூ.26,000/- ஆக இருந்தது. அவர்களின் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அவர்கள் பெற்று வந்த சம்பளம் ரூ.26,000/- என்பதனை ரூ.34,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. வரும் மே மாதம் முதல் இந்த சம்பளம் ரூ.40,000/- ஆக உயர்த்தப்படவிருக்கிறது. பல் மருத்துவர்கள் இந்த அரசு பொறுப்பேற்கும் போது ரூ.26,000/- சம்பளம் பெற்று வந்தார்கள். பிறகு ரூ.34,000/- ஆக உயர்த்தப்பட்டது. இவர்களுக்கும் வரும் மே மாதம் முதல் மாதச் சம்பளம் ரூ.40,000/- ஆக உயர்த்தி வழங்கப்படவிருக்கிறது. அதேபோல் தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் (IT coordinators) சம்பளம் இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன் ரூ.16,500/- பெற்று வந்தார்கள். பிறகு ரூ.21,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. தற்போது அவர்களுக்கும் வரும் மே மாதம் முதல் ரூ. 27,500/- ஆக சம்பளம் உயர்த்தி வழங்கப்பட உள்ளது. அதேபோல் தாய்சேய் நல அலுவலர் (Maternal Child Health Officers) ஏற்கெனவே அவர்கள் பெற்று வந்த சம்பளம் ரூ.15,000/- இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு ரூ.19,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. தற்போது அவர்களுக்கு ரூ.22,000/- ஆக வழங்கப்பட உள்ளது. அதேபோல் செவிலியர்களைப் பொறுத்தவரை அவர்கள் மாதச் சம்பளம் ரூ.14,000/- பெற்று வந்தார்கள். பிறகு அவர்களுக்கு ரூ.18,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. தற்போது அவர்களுக்கும் ரூ.21,000/- ஆக சம்பளம் உயர்த்தி வழங்கப்பட உள்ளது. மருந்தாளுநர்கள் ஏற்கெனவே ரூ.12,000/- சம்பளம் பெற்று வந்தார்கள். இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு அவர்களுக்கு ரூ.15,000/- என்கின்ற வகையில் சம்பளம் வழங்கப்பட்டது. தற்போது அவர்களுக்கு ரூ.18,000/-ஆக சம்பளம் உயர்த்தி வழங்கப்பட்டது. பெண் துணை செவிலியர்கள் ஏற்கெனவே மாதச் சம்பளம் ரூ.11,000/- வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு அவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ.14,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. தற்போது அவர்களுக்கு ரூ.17,500/- ஆக சம்பளம் உயர்த்தி வழங்கப்படவிருக்கிறது. இயன்முறை சிகிச்சையாளர்கள் ஏற்கெனவே ரூ.10,000/- மாதச் சம்பளமாக பெற்று வந்தார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு ரூ.13,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. தற்போது ரூ.23,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட உள்ளது.

அதேபோல் ஆய்வக நுட்புநர்கள் அவர்கள் முதலில் பெற்று வந்த சம்பளம் ரூ.10,000/- இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு ரூ.13,000/- தற்போது ரூ.17,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட உள்ளது. அதேபோல் பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் ஏற்கெனவே ரூ.6,500/- ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு ரூ.8,500/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. தற்போது ரூ.11,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட உள்ளது. இத்தகைய சம்பள உயர்வின் மூலம் அரசிற்கு ரூ.169 கோடி கூடுதல் செலவினம் ஏற்பட உள்ளது. 2023-24 நிதியாண்டிலிருந்து 2,650 ஆஷா பணியாளர்கள் ஊக்கத்தொகை என்கின்ற வகையில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு ரூ.1,500/- ரூ.2,000/- என்று இருந்த ஊக்கத்தொகை அவர்களுக்கு ரூ.5,950/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. பெருமதிப்பிற்குரிய திரு.சுப்பராயன் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் தொடர்ச்சியாக அவர்களுக்கு வைத்த கோரிக்கையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அவர்கள் கனிவுடன் பரிசீலினை செய்து அவர்களுக்கு தற்போது ரூ.7,000/- வரை கூடுதலாக வழங்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதன் மூலம் அரசிற்கு ரூ.3.21 கோடி நிதி கூடுதல் செலவினம் ஏற்பட இருக்கிறது. இந்த பணி ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சியில் இத்தகைய ஊதிய உயர்வு குறித்து சொல்வதில் மிக்க பெருமகிழ்ச்சி அடைகிறோம். அதேபோல் இந்நிகழ்வில் மற்றொரு சிறப்பாக குடும்ப நல திட்டத்தை மாநில அளவில் திறம்பட செயல்படுத்திய மாவட்ட அளவிலான மாவட்ட ஆட்சியர்கள், மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், மாவட்ட இணை இயக்குநர்கள், மாவட்ட குடும்ப நல துணை இயக்குநர்கள், மாவட்ட சுகாதார அலுவலர்கள், மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிலையங்களை பாராட்டி 45 பேருக்கு சான்றிதழ்களும், கேடயங்களும் இந்த நிகழ்ச்சியில் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் விழா பேருரையாற்றினார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் திருமதி.உமா மகேஸ்வரி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சித்ரா, குடும்பநலத்துறை இயக்குநர் மரு.சத்யா, கூடுதல் இயக்குநர்கள் மரு.தேரணிராஜன், மரு.சம்பத், மரு.சேரன், மரு.தேவபார்த்தசாரதி மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், உயரலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்படும்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்ற சீராய்வுக் கூட்டத்தில் முடிவு!

சென்னை, மார்ச்.9-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நேற்று (07.03.2026) ஆணையர் அலுவலகத்தில் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு தொடர்பான சீராய்வு கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் புகழ் பெற்ற திருக்கோயில்களில் ஒன்றாக மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் திகழ்ந்து வருகிறது. இத்திருக்கோயிலுக்கு தமிழ்நாடு மட்டுமன்றி வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் வருகை தந்து சுவாமி தரிசனம் செய்கின்றனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்கோயிலுக்கு கடந்த 08.04.2009 ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றது. இத்திருக்கோயில் வீரவசந்தராயர் மண்டபத்தில் 02.02.2018 அன்று ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாக மண்டபம் முழுமையாக சேதமடைந்தது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு ஆகம விதிப்படி மீண்டும் குடமுழுக்கு நடத்திட திருக்கோயில் நிதி ரூ. 15.81 கோடி மற்றும் உபயதாரர் நிதி ரூ.16.47 கோடி என மொத்தம் ரூ.32.28 கோடியில் 186 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் வீரவசந்தராயர் மண்டபத்தினை பழமை மாறாமல் முற்றிலும் புனரமைத்திடும் வகையில் ரூ.35.30 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மார்ச் மாத இறுதிக்குள் நிறைவடையும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் இன்று ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற சீராய்வுக் கூட்டத்தில் மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழு உறுப்பினர்கள், திருக்கோயில் ஸ்தானிக பட்டர்கள் மற்றும் ஆகம வல்லுநர் இராஜா பட்டர் ஆகியோர் திருக்கோயில் திருப்பணிகள் மற்றும் வீரவசந்தராயர் மண்டப புனரமைப்பு பணிகள் மார்ச் மாத இறுதிக்குள் நிறைவடைந்தாலும், இத்திருக்கோயிலில் ஆண்டு முழுவதும் நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் உற்சவங்களை நிறுத்த இயலாத காரணத்தினாலும், குடமுழுக்கு நடத்துவதற்கு பராபவ ஆண்டு ஆவணி மாதம் 31ஆம் தேதி (17.09.2026) வியாழக்கிழமை அன்று ஒரு நாளே உகந்த நாளாக அமைந்துள்ளது என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு வருகின்ற பராபவ ஆண்டு ஆவணி மாதம் 31ஆம் தேதி (17.09.2026) வியாழக்கிழமை காலை 7.45 மணிக்கு மேல் 08.10 மணிக்குள் திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா நடத்துவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் முனைவர் துரை. இரவிச்சந்திரன், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, கூடுதல் ஆணையர்கள் திருமதி சி.ஹரிப்ரியா, பொ. ஜெயராமன், திருமதி சி.கல்யாணி, சிறப்புப் பணி அலுவலர் சி.லட்சுமணன், கண்காணிப்பு பொறியாளர்கள் எஸ்.செல்வராஜ், கே.சச்சிதானந்தம், மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலர் நா.சுரேஷ், திருக்கோயில் அறங்காவலர்கள் திருமதி டி.சுப்புலட்சுமி, திருமதி எஸ்.மீனா, பி.கே.எம். செல்லையா, மருத்துவர் மு.சீனிவாசன், ஸ்தபதி வி.பி.வேல்முருகன் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும்

# திருச்சி மாநாட்டிற்கு தீரர்கள் அலைகடலென திரண்டு வாரீர்!

## மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ வேண்டுகோள்!

திருவள்ளூர், மார்ச் 9-

தீரர் கோட்டமாம் திருச்சிக்குத் திரண்டுவா உடன் பிறப்பே ! திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்திட உறுதியேற்றுக் களம் காண்போம்!” என்று முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அன்புக்கட்டளையை ஏற்று திருச்சியில் 9-ஆம் தேதி மாலை நடைபெறும் கழக மாநில மாநாட்டிற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள சட்ட மன்ற உறுப்பினர் மாநில மாவட்ட நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி செயலாளர்கள் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக அணிகளின் நிர்வாகிகள் இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் அலைகடலென திரண்டு வரும்படி மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் தி.மு.கழகத்தின் ‘ஸ்டாலின் தொடரட்டும் - தமிழ்நாடு வெல்லட்டும் என்கிற தேர்தல் சிறப்பு மாபெரும் கழக நிர்வாகிகள் மாநாடு நாளை 9-ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் திருச்சி சிறுகனூரில் மிகவும் கோலாகலமாக நடைபெற உள்ளது. 10 லட்சம் கழக நிர்வாகிகள் பங்கேற்கும் வகையில் மிகவும் பிரம்-மாண்டமான முறையில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

“தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் திரள்வோம்! திராவிட மாடல் 2.0 ஆட்சியை அமைப்போம்! திருச்சிக்கு திரண்டு வா உடன்பிறப்பே!” என்று உள்ளன்புடன் உடன் பிறப்புகளுக்கு கடிதம் எழுதி மகிழ்ச்சியுடன் அழைத்துள்ளார்.

திருச்சியில் நடைபெறும் இம்மாபெரும் மாநாடு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் நம்முடைய அன்புத்தலைவர் தளபதி அவர்கள் அடையப்போகும் இமாலய வெற்றிக்கு கட்டியம் கூறும் வகையில் இந்தியத் திருநாடே திரும்பிப் பார்க்கும் வகையில் 10 லட்சம் தி.மு.க. தீரர்கள் திரண்டு சரித்திர சாத-னையை படைத்தனர் என்று இந்திய அரசியல் வரலாற்றில் இடம் பெறும் வகையில் திருப்புமுனை மாநாடாக அமைய உள்ளது.

தலைவர் அவர்களின் அன்புக்கட்டளையை ஏற்று திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள் - கழக தீரர்கள் அனைவரும் கொள்கை தீரர்களாக தலைவரின்சிப்பாய்களாக பெரும்படையாக திரண்டு வந்து இம்மாநாட்டை வெற்றியடைச் செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்-கொள்கிறேன்.

சரித்திர சாதனை படைக்க உள்ள இம்மா பெரும் மாநாட்டில் கலந்து கொள்வது “நமது உரிமை””நமது கடமை” என்ற அந்த லட்சிய உணர்வோடு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் -கழக தீரர்கள் அனைவரும் 9-ஆம் தேதி மாலை 3.00 மணிக்கெல்லாம் திருச்சி சிறுகனூர் மாநாட்டு திடலுக்கு அணி அணியாக திரண்டு வந்து பங்கேற்கும் படி தங்களை இருகரம் கூப்பி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

“இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்ற பேறறிஞர் அண்ணாவின் வைர வரிகளுக்காக ஒப்பாக இதுவரை இதுப் போன்ற பிரம்மாண்ட-மான மாநாடு நடைபெற்றது இல்லை என்று அனைவரும் கூறும் வகையில் நம்முடைய மாவட்டத்தில் உள்ள கழகத்தினரும் அலைகடலென திரண்டு வாரீர்!! வாரீர் !! என்று அக மகிழ்ந்து அன்புடன் அழைக்கிறேன். மாற்றுக் கட்சியினரும் மிரண்டு போகும் வகை-யில், வருகிற 2026-ஆம் ஆண்டு தேர்தலில் மீண்டும் தி.மு.க. தான் ஆட்சிக்கு வரும் என மக்கள் அனைவரும் எண்ணும் அளவிற்கு இந்த மாநாடு சரித்திர சாதனையை படைக்கும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



உலக மகளிர் தின விழாவை முன்னிட்டு உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் ஏகனாம் பேட்டை ஊராட்சியில் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர். திருமதி. பூங்கொடி ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு கேக் வெட்டி. நல திட்ட உதவிகள் வழங்கினார் உடன் ஒன்றிய செயலாளர் பி.சேகர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.சஞ்சய் காந்தி, மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் ஆ. செல்வி.எஸ் மாலதி காஞ்சி தெற்கு ஒன்றிய மகளிரணி திருமதி.கீதா வெங்கடேசன். திருமதி.எல்லம்மாள் தயாளன் உள்ளிட்ட மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.